திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அந்த அரிசி எந்தெந்த இடங்களில் வினியோகிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ்மக்கள் பகுதிகளில் இந்த அரிசி வினியோகிக்கப்பட்டது. மற்றும் தீவிபத்து நடந்த பகுதிகளிலும் இந்த அரிசி வினியோகிக்கப்பட்டது. எங்கெங்கு தீவிபத்துக்கள் ஏற்பட்டனவோ அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்த அரிசி வினியோகிக்கப்பட்டது. தனியாகக் கேள்வி கேட்டால், எந்தெந்த இடங்களில் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பது பற்றிய புள்ளி விவரம் கொடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநில அரசுக்கும், தமிழக அரசுக்கும் நேச உறவு இருப்பதன் காரணமாக நம்முடைய பஞ்சநிலைக்கு பஞ்சாப் அரசு அரிசி கொடுத்ததைப் பாராட்டுகிறேன். இந்த நேச உறவை அடிப்படையாகக் கொண்டு, பஞ்சாப் மாநிலத்தில் சிறுதொழில்களும் கைத்தொழில்களும். . .

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இந்தக் கேள்வி அரிசி நன்கொடை கொடுத்ததைப்பற்றியது. அதையொட்டித்தான் கேள்வி கேட்கவேண்டும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலம் அரிசி கொடுத்ததை நன்றியுடன் ஏற்றுக்கொண்டோம். அவர்கள் விவசாயத் துறையிலும், கைத்தொழில் துறையிலும் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் பரிசீலத்து நம் மாநிலத்திலும் அத்தகைய முயற்சிகளை. . .

(மணியடிக்கப்பட்டது)

(விடைஇல்லை).

Salem Steel Plant

*200 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR and Thiru V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any high level meeting of representatives of the Union Government and this Government took place about the 22nd October, 1969 on Salem iron ore exploitation?

The Hon. Thiru S. MADHAVAN: The proposed Salem Steel Plant was discussed in detail with the officials of the Ministry of Steel and Heavy Engineering (Department of Steel) on 20th October 1969. The adequacy of iron ore resources to support the steel plant and the availability of lignite char in required quantities from the Neyveli Lignite Corporation without waiting

1970 மார்ச் 4]

for the second mine cut came up for special mention. Government of India officials were satisfied about these. This was followed by a meeting on 21st October 1969 with the then Union Minister for Steel and Heavy Engineering.

* 201. வினு திரு. கே. போஜன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், இத்தொழிற்சாலை அமைக்கும் வேலை எப்பொழுதிலிருந்து ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான இரும்பு தாதுக்களை உடனடியாக வெட்டியெடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். கஞ்சமலை போன்ற பகுதிகளில் இரும்புத் தாதுக்களை வெட்டி எடுக்கக்கூடிய வேலைகளைத் தொடங்கியிருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு அதிகாரிகள் இதுவிஷயமாக என்ன கருத்து கூறியிருக்கிறார்கள்? இப்போது ஆரம்பிக்கப்படுவதற்கான சிபாரிசு செய்யக்கூடிய தன்மையிலே கூறினார்களா? அல்லது இப்போது ஆரம்பிக்கக்கூடாது, இப்போது சூழ்நிலை சரியில்லை, இப்போது நிதி நிலைமை சரியில்லை என்று கூறினார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அதிகாரிகள் சேலம் உருக்காலைபற்றி விவாதித்தார்கள். பல பிரச்சினைகளை எழுப்பினார்கள். நம்முடைய அரசின் சார்பிலே இந்தத் திட்டம் ஏற்பட வேண்டியதன் அவசியத்தைச் சொன்னோம். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இருப்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தைக் குறித்து அத்தனை புள்ளி விவரங்களையும் சேகரித்து அறிக்கைகள் தயாராக வைத்திருக்கிறோம். இதை உடனடியாக நிறைவேற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லையென்பதை நிரூபித்திருக்கிறோம். டெல்லியில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் சந்தித்திருக்கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து, நம்முடைய அரசிடத்திலே கலந்துபேசுகிற சமயத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு அதற்கான